DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W.10 |
| Name | : | **சூரியநாராயணன்** |
| Father's Name | : | **சண்முகசுந்தரம்** |
| Village | : | **வந்தவாசி** |
| Taluk | : | **திருவண்ணாமலை** |
| Calling | : | **மருத்துவர்** |
| Age | : | **38/2025** |

**(வழக்கின் எதிரிகள் 1, 2 ஆஜர். 3-ம் எதிரி ஆஜர் இல்லை. 3-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 04.11.2025

**(காணொளி வாயிலாக சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் கொன்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். நான் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக பணி புரிந்த சமயம் கடந்த 13.08.2021 ம் தேதி இரவு 10.55 மணிக்கு துரைப்பாண்டி வயது 37 உடன் அவருடைய மனைவி இந்துமதி வயது 27 108 ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு சிகிக்சைக்கு வந்தவர்களை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்கை அளித்தேன். அவர்களை விசாரித்த போது 13.08.2021 ம் தேதி

அன்று இரவு 8.45 மணிக்கு அவர்களுடைய வீட்டருகே வசிக்கும் ஒரு தெரிந்த நபர் அருவாள் மூலம் தாக்கியதாக கூறினார்.

2. துரைப்பாண்டி என்பவருக்கு வலது கையில் 6x1x1cm அளவில் ஒரு வெட்டுக்காயமும், வலது தோள்பட்டையின் பின்புறம் 10x1x1x cm அளவில் ஒரு வெட்டுக்காயமும் இருந்தது. முதல் சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என விபத்து பதிவேட்டில் சான்று வழங்கினேன். நான் வழங்கிய **காயச்சான்று அ.த.சா.ஆ.4** ஆகும்.

3. இந்துமதி என்பவருக்கு வலது கையின் முட்டிக்கு அருகே 5x1x1x cm அளவில் ஆழமான வெட்டுக்காயம் காணப்பட்டது. அதன் அடியில் இருந்த Humorous என்ற எலும்பு முறிந்து காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என விபத்து பதிவேட்டில் சான்று வழங்கினேன். நான் வழங்கிய **காயச்சான்று அ.த.சா.ஆ.5** ஆகும். நான் மேற்சொன்ன காயங்கள் அருவாளால் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:

**1.** துரைப்பாண்டி, இந்துமதி ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் இரவு சுமார் 8.45 மணிக்கு அரை மணி நேரத்திற்கு முன்போ, பின்போ ஏற்பட்டதாக தான் சொல்லியுள்ளார்களா என்றால் ஆமாம். இருவருமே தங்களை தெரிந்த ஒரு நபரால் தாக்கப்பட்டதாக மட்டுமே சொல்லியுள்ளனர் என்றால் ஆமாம். துரைப்பாண்டிக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயங்கள் அவரே தனது கையில் அருவாள் வைத்திருந்து அதனை முதுகிலிருந்து எடுக்கும்போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு இல்லை, ஒன்றாவதாக ஏற்பட்ட காயம் மட்டும் ஏற்பட வாய்ப்புள்ளது. இரண்டாவதாக உள்ள காயமானது அருவாளை பிடுங்கும்போது அருவாள் மேல் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புண்டு, ஆனால் இந்தளவுக்கு நீளமான காயம் ஏற்பட வாய்ப்பில்லை.

2. அருவாளில் உள்ள வளைவான பகுதி வெட்டும்போது அதனுடைய மூக்கு பகுதி பட்டு குத்துக்காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி என்னிடம் ஆயுதத்தை நேரடியாக காட்டி நான் சொன்ன மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்று கருத்துரை கேட்டாரா என்றால் ஆமாம். எந்ததேதியில் எத்தனை மணிக்கு கேட்டார் என்றால் தற்போது ஞாபகமில்லை. என்னை புலன் விசாரணை அதிகாரி எந்த தேதியில் விசாரித்தார் என்றால் தற்போது ஞாபகமில்லை. நான் சொல்வது போல் புலன் விசாரணை அதிகாரி என்னிடம்வழக்கு அருவாளை காட்டி என்னிடம் கருத்துகள் கேட்கவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக கேட்டதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரணைசெய்யும் போது அருவாளை காட்டி கருத்துரை கேட்டதாக நான் அவரிடம் வாக்குமூலம் அளித்தேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வளைவான அருவாளை கொண்டு காயம் ஏற்பட்டிருந்தால் அந்த காயமும் வளைவாக காணப்படும் என்றால் காயம் வளைவாக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் சொன்ன மேற்படி காயங்கள் அருவாளை தவிர வேறு கூர்மையான ஆயுதங்களாலும் வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

4. இந்துமதிக்கு ஏற்பட்ட காயங்கள் தடிமத்துடன் கூடிய கூர்மையான எந்த ஒரு ஆயுதத்தாலும் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். எலும்பு முறிவு ஏற்பட்டதற்கான எக்ஸ்ரே எடுக்கட்டதா என்றால் ஆமாம். நான் எக்ஸ்ரே எடுக்கப்பட்ட ஆதாரமாக ஆவணங்கள் புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை ஆனால் காட்டினேன். எலும்பு முறிவிற்கான ஆதாரமாக எக்ஸ்ரேவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றால் நான் காணொளியில் சாட்சியம் அளிப்பதால் சமர்ப்பிக்க இயலவில்லை.

5. நான் சொல்வது போல் எக்ஸ்ரே எடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு எடுத்திருந்தால் புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. இந்துமதிக்கு ஏற்பட்டதாக சொல்லும் எலும்பு முறிவு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் சொல்லப்பட்ட நேரத்திலிருந்து மேற்படி காயங்களானது ஒரு மணி நேரம் முன்னதாகவோ பின்பாகவோ ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் இருக்கலாம்.

**அரசு தரப்பில் மறு விசாரணை:**

நான் எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் எக்ஸ்ரே ஆவணமானது எங்கு உள்ளது என்றால் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள கதிரியக்க ஆவண சேகரிப்பு துறையில் (MRD) உள்ளது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் எக்ஸ்ரே சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள கதிரியக்க ஆவண சேகரிப்பு துறையில் (MRD) உள்ளது என்ற விபரத்தை புலன் விசாரணை அதிகாரி விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்துமதிக்கு வழங்கப்பட்ட காயச்சான்றிதழில் மேற்படி எக்ஸ்ரே MRD-ல் உள்ளது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.04 12:54:41 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை.**